# தஞ்சாவூர் மாவட்ட கனிம அறக்கட்டளை
# 2018 – 2019 ம் நிதி ஆண்டு அறிக்கை
# (Annual Report)

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் - 2017 -ன் படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண்: 281-1/கனிமம்/2017 நாள்: 16.10.2017 -ன் படி தஞ்சாவூர் மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு அறக்கட்டளைப் பத்திரமானது ஆவண எண்.25/2017 (Book-IV) நாள்:23.10.2017 ன் படி தஞ்சாவூர் மாவட்டம், வல்லம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர். | 1. | மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர். |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர். | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், தஞ்சாவூர். |
| 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, தஞ்சாவூர். | 3. | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, தஞ்சாவூர். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர். | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தஞ்சாவூர். |
| 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், தஞ்சாவூர் | 5. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், தஞ்சாவூர். |
| 6. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, தஞ்சாவூர். | 6. | முதன்மை கல்வி அலுவலர். தஞ்சாவூர். |
| 7. | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தஞ்சாவூர் | 7. | மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர். |
| 8. | மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர். | 8. | மாவட்ட சமூகநல அலுவலர், தஞ்சாவூர். |
| 9. | மாவட்ட வன அலுவலர், தஞ்சாவூர். | 9 | உதவி இயக்குநர், பஞ்சாயத்து துறை, தஞ்சாவூர். |
| 10. | மண்டல தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, திருச்சி. | 10. | சென்டர் ஈகாலஜி மற்றம் ஆராய்ச்சி மையம், நடராஜபுரம், தஞ்சாவூர் (NGO) |
| 11. | உதவி இயக்குநர், நில அளவைப் பதிவேடுகள் துறை, தஞ்சாவூர் | 11. | மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தஞ்சாவூர். |
| 12. | மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர். | | |
| 13. | மாவட்ட சமூகநல அலுவலர், தஞ்சாவூர். | | |

| | | | |
|---|---|---|---|
| 14. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், தஞ்சாவூர். | | |
| 15. | மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், தஞ்சாவூர். | | |
| 16. | வருவாய் கோட்டாட்சியர், தஞ்சாவூர். | | |

தஞ்சாவூர் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரை தலைவராக கொண்டு பாரத ஸ்டேட் வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (**கணக்கு எண் 37255723243**) துவக்கப்பட்டு சிறுகனிமங்களுக்கான உரிம கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 சிறு கனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிம கட்டணத்தில் **10%** தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2019 வரை ரூ.23,80,952/- வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2018 – 2019 ம் நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக ஒரு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

| **வ. எண்** | **திட்டத்தின் பெயர்** | **பணிவிபரம்** | **மதிப்பு (ரூ)** | **நடை முறைப்படுத்தும் அமைப்பு** | **பணி முடிக்கப்பட்ட நாள்** |
|---|---|---|---|---|---|
| 1 | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் குருங்குளம் கிழக்கு கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் புதிய குடிநீர் குழாய் பதித்து குடிநீர் வழங்கும் திட்டம். | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம் குருங்குளம் கிழக்கு கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் புதிய குடிநீர் குழாய் பதித்து குடிநீர் வழங்கும் திட்டம். | 1,75,000/- | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தஞ்சாவூர் | 04.10.2018 |

தஞ்சாவூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2019 வரை ரூ.23,80,952/- தொகை வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகையில் ரூ.1,75,000/- மட்டும் செலவு செய்யப்பட்டது.

இவ்வறிக்கையானது தஞ்சாவூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

(ஒ/ம)

தலைவர், தஞ்சாவூர் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை/
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

14/09/2020

14/9/2020
2.PM